**செய்தி வெளியீடு எண்: 930** **நாள்04.12.2020**

**<u>இன்று (4.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

சிவகங்கை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்தும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அறிவித்த திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க போர்க்கால அடிப்படையில் அனைத்து துறைகளும் முடுக்கிவிடப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு, கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக இந்நோய்த் தொற்றுப் பரவல் தமிழ்நாட்டில் படிப்படியாகக் குறைந்து வருகிறது. பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை சுமார் 1,500–க்கும் குறைவாக உள்ளது. இந்நோய் தொற்று பரவிய ஆரம்ப காலத்தில், தமிழகத்தில் சற்று அதிகமாகவும், அண்டை மாநிலங்களில் குறைவாகவும் இருந்தது. அரசின் தீவிர நடவடிக்கைகளின் விளைவாக இந்நோய்ப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, அண்டை மாநிலங்களில் அதிகரித்துள்ளது. இந்நோய்ப் பரவலை கட்டுப்படுத்த உதவிகரமாக இருந்த மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, வருவாய், உள்ளாட்சி, உணவு, கூட்டுறவு, காவல் என பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டதன் விளைவாக இந்நோய் தொற்றுப் பரவல் தமிழகத்தில் குறைந்துள்ளது. இந்தத் துறைகளில் பணியாற்றிய அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை அரசின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டத்தில், இதுவரை இந்நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் **6,345** நபர்கள், குணமடைந்தவர்கள் **6,139** நபர்கள், இறந்தவர்கள் **125** நபர்கள்.

நேற்றையதினம், படிப்படியாகக் குறைந்து 16 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தற்போது சிகிச்சையில் உள்ளவர்கள் 80 நபர்கள். மாவட்ட நிர்வாகமும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் சிறப்பாக செயல்பட்டு, சிவகங்கை மாவட்டத்தில் இந்நோய் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தியுள்ளது.

இந்நோய் பரவல் குறைந்திருந்தாலும், மருத்துவ வல்லுநர்கள் மீண்டும் இது அதிகரிக்க வாய்ப்பு இருக்கின்றது என்றும், மழைக் காலமாக இருக்கின்ற காரணத்தினால் மேலும் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும் என்ற கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்கள். எனவே, மாவட்ட நிர்வாகத்திற்கும், சுகாதாரத் துறைக்கும் மற்றும் பல்வேறு துறைகளுக்கும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொறுத்தவரை, இந்நோய்ப் பரவல் குறைந்து வருகிறது.

சிவகங்கை மாவட்டத்தில், இந்நோய்த் தொற்று ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தேவையான மருத்துவமனைகளும், படுக்கை வசதிகளும் தயார் நிலையில் உள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான மருந்துகளும், உபகரணங்களும் கையிருப்பில் தயார் நிலையில் உள்ளன. எனவே மக்கள் அச்சப்படத் தேவையில்லை. ஆனால், மக்கள் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும்.

இந்நோய்ப் பரவல் பல்வேறு நாடுகளிலும், நமது அண்டை மாநிலங்களிலும், ஆரம்ப காலங்களில் அதிகமாக இருந்து அந்தந்த நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகக் குறைந்து, இயல்பு நிலைக்கு திரும்பினர். ஆனால், பொதுமக்கள், அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கேட்காமல் இருந்த காரணத்தினால், சில நாடுகளில் மீண்டும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் அதிகரித்துவிட்டது. இது ஒரு தொற்று நோய். ஆகவே, இயல்பு நிலை திரும்புவதற்கு அரசு படிப்படியாக தளர்வுகளை அறிவித்தாலும், பொதுமக்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். இதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்காத சூழ்நிலையில் அனைவரும் பத்திரமாக இருக்க வேண்டும், அரசு அறிவிக்கும் வழிமுறைகளை பொதுமக்கள் தவறாமல் கடைபிடிக்க வேண்டுமென்று மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அரசு அறிவிக்கின்ற வழிமுறைகள்தான் இந்நோய்க்கு மருந்து, பாதுகாப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டத்தில், முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட 8,937 மனுக்களில் 4,111 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. 2019–20ஆம் நிதியாண்டில் சிவகங்கை மாவட்டத்தில் 6,486 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பட்டா மாறுதல் வேண்டி பெறப்பட்ட 1,310 மனுக்களில், 784 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. காவேரி குடிநீர் கிடைக்கப்பெறாத சிவகங்கை மாவட்ட மக்களுக்கு அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். 3 நகராட்சிகள், 12 பேரூராட்சிகள், 3,352 கிராமங்களையும் உள்ளடக்கிய சிவகங்கை மாவட்ட மக்களுக்காக மாபெரும் கூட்டுக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம். இதில், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக 799 ஊரக குடியிருப்புகளும், 3 பேரூராட்சிகளும், ஒரு நகராட்சியும், புதுக்கோட்டை கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் 125 குடியிருப்புகளும், மேலூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் ஒரு பேருராட்சியும் பயன் பெறுகின்றன. சிவகங்கை மாவட்டத்திற்கு காவேரி குடிநீர் கிடைக்காமல் விடுபட்ட 11 ஊராட்சி ஒன்றியங்கள் உட்பட 2,459 ஊரகக் குடியிருப்புகளும், 8 பேரூராட்சிகளும், 3 நகராட்சிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பொருட்டு சேர்க்கப்பட்டுள்ளன. சிவகங்கை கூட்டுக் குடிநீர் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் சட்டமன்ற விதி எண் 110–ன் கீழ் 8.8.2014–ல் அறிவிக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்திற்கு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், காவேரி குடிநீர் கிடைக்கப் பெறாத சிவகங்கை மாவட்ட மக்களுக்கு சிவகங்கை மாபெரும் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு தமிழ்நாடு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.97–ல் 10.9.2020–ன்படி ரூபாய் 1752.73 கோடி மதிப்பீட்டில் 11.40 லட்சம் மக்கள் தற்போது பயன்பெறும் வகையில் அரசாணை வெளியிட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்படும். ஆகவே, சிவகங்கை மாவட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

சிவகங்கை நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் நிலையிலுள்ளது. தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. காரைக்குடி நகராட்சியைப் பொறுத்தவரை பாதாள சாக்கடைத் திட்டம் ரூபாய் 112.5 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டு சுமார் 85 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன, எஞ்சிய பணிகளை விரைந்து முடிக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குடிமராமத்துத் திட்டத்தைப் பொறுத்தவரை, 2016–2017 முதல் 2019–2020 வரை 236 கண்மாய்கள் தூர்வாரப்பட்டதில் 35,566 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 2020–2021ஆம் ஆண்டில் சிவகங்கை மாவட்டத்தில் 35 கண்மாய்களை புனரமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, 16,230 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுமளவில் ரூபாய் 26.54 கோடி மதிப்பீட்டிலான பணிகளில் 80 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன, எஞ்சிய பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உப்பாறு உபவடி நிலத்திலுள்ள 61 கண்மாய்கள் மற்றும் வரத்து வாய்க்கால்களை புனரமைக்கும் பணி ரூபாய் 37.84 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 22,059 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட உப்பாற்றை சமப்படுத்துதல் மற்றும் அதன் குறுக்குக் கட்டுமானங்கள் புனரமைக்கும் பணி ரூபாய் 14.50 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 7,454 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. தேவகோட்டை, கண்ணங்குடி, திருப்பத்தூர், சிங்கம்புணரி, கல்லல் ஒன்றியங்களில் உள்ள 24 கண்மாய்களை பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு ரூபாய் 9.83 கோடி மதிப்பீட்டில் 2,737 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மானாமதுரை, சிவகங்கை மற்றும் காரைக்குடி தொகுதிகளின் நீர்நிலைகளை பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் (RRR)-II திட்டத்தின் கீழ் 19 நீர்நிலைகளை சீரமைக்கும் பணி ரூபாய் 7.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளது. தேவகோட்டை வட்டம், கைக்குடி கண்மாய் மற்றும் அதன்

ஒருங்கிணைந்த கண்மாய்களுக்கு பாசன வசதி அளிக்கும் பொருட்டு, உதையாச்சி கிராமம் அருகில் மணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டும் பணி ரூபாய் 10.60 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

2020–21ஆம் நிதியாண்டில் கொட்டாம்பட்டி–திருப்பத்தூர்–காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை எண்.383 நீட்சியில் சிங்கம்புணரி முதல் திருப்பத்தூர் வரை 24.450 கி.மீ நீளத்திற்கு ரூபாய் 113.76 கோடி மதிப்பீட்டில் இச்சாலையானது கடினபுருவங்களுடன் கூடிய இருவழிச் சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிகள் தற்போது தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. சென்னை–கன்னியாகுமரி தொழிற்தடச் சாலைத் திட்டத்தின் கீழ் மேலூர்–திருப்பத்தூர் சாலையில் 16.26 கி.மீ சாலையை அகலப்படுத்தி மேம்படுத்துதல் மற்றும் 2.66 கி.மீ. நீளம் திருப்பத்தூருக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு ரூபாய் 110 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் இறுதி செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன, விரைவில் பணி துவங்கப்படும். திருப்பத்தூர் ஆலங்குடி சாலை, மாத்தூர் முளக்குளம் சாலை, அரண்மனை சிறுவயல் சாலையில் ரூபாய் 20.16 கோடி மதிப்பீட்டில் 3 உயர்மட்டப் பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 100–லிருந்து 150–ஆக உயர்த்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மருத்துவ மாணவர்களின் பட்ட மேற்படிப்பிற்காக முதுநிலை மருத்துவ மேற்படிப்புகள் தொடங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 65 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 66 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம் அமைக்கப்பட்டு மாணவ, மாணவியர்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் 2020–21ஆம் ஆண்டில் 35 ஊராட்சிகளிலுள்ள 53 குக்கிராமங்களில் 4,231 வீடுகளுக்கு ரூபாய் 8.85 கோடி மதிப்பீட்டில் வீடுகளுக்கான செயல்படக்கூடிய குடிநீர் இணைப்பு வழங்கிடும் பணிகளில் தற்போது வரை 749 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன, எஞ்சிய வீடுகளுக்கு இணைப்புகள் வழங்குவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும். திடக்கழிவு மேலாண்மைப் பணிகள்–2018–2019ன் கீழ் ரூபாய் 19.87 கோடி மதிப்பீட்டில்

29 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 28 பணிகள் முடிவுற்று சிவகங்கை, காரைக்குடி, தேவகோட்டை நகராட்சிகளில் பயன்பாட்டில் இருக்கிறது. அம்ருத் திட்டத்தின் கீழ் பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

2016–2017, 2018–2019 மற்றும் 2019–2020 ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டத்தில் வறட்சி மற்றும் மழையால் ஏற்பட்ட பயிர்ச்சேதத்திற்கு 96,109 விவசாயிகளுக்கு ரூபாய் 82.5 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. கூட்டுப் பண்ணையத் திட்டத்தில் விவசாயிகளுக்கு உதவி செய்யப்படுகிறது. பண்ணைக்குட்டைகள் அமைக்கும் திட்டத்தில் ரூபாய் 6.5 கோடி சிவகங்கை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. கஜா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிட மக்களுக்கு கடந்த ஐந்தாண்டுகளில் பல்வேறு நன்மைகள் அம்மாவின் அரசு மூலமாக கிடைக்கப் பெற்றிருக்கிறது.

உலக முதலீட்டாளர் மாநாடு–2019 மூலம் 58 தொழில் நிறுவனங்கள் நிறுவுவதற்கு ரூபாய் 153.76 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 32 தொழில் நிறுவனங்கள் ரூபாய் 17.77 கோடி முதலீட்டில் செயலாக்கம் பெற்றுள்ளன.

மத்திய அரசின் சொத்து பிணையில்லா அவசரக் கால கூடுதல் கடன் திட்டத்தின் கீழ் 4,316 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 108 கோடி கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது சிவகங்கை பையூர், முல்லைவாயல் கிராமங்களில் ரூபாய் 55.40 கோடி மதிப்பீட்டில் 608 வீடுகள் அடங்கிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளன. ரூபாய் 2.10 இலட்சம் மானியத்தில் சுயமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 2,531 பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீடு ரூபாய் 75.93 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதில் 1,185 பயனாளிகள் வீடு கட்டி முடித்துள்ளனர்.

புதிய கால்நடை நிலையங்கள் கட்டுவதற்கு ரூபாய் 10.7 கோடி மதிப்பீட்டில் செயலாக்கம் செய்ய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருப்பத்தூர் தேர்வு நிலை பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ரூபாய் 3.30 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2020–21ஆம் ஆண்டில் சிங்கம்புணரி, மானாமதுரை

மற்றும் திருப்பத்தூர் ஆகிய பேரூராட்சிகளில் ரூபாய் 7.50 கோடி மதிப்பீட்டில் வாரச் சந்தை மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கீழடியில் நான்கு மற்றும் ஐந்தாம் கட்ட அகழ்வாராய்ச்சிக்கு தமிழ்நாடு அரசால் ரூபாய் 1.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், அகரம் மற்றும் கொந்தகை ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் மேற்கொள்ளவுள்ள ஆறாம் கட்ட தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பணிகள் என்னால் 19.2.2020 அன்று காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த அகழ்வாராய்ச்சி மூலம் தமிழர்களின் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான, தொன்மையான நாகரிகத்தை, பண்பாட்டை உலகறியச் செய்ய தமிழ்நாடு அரசால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த 3 ஆண்டுகளில் ரூபாய் 14.3 கோடி மானியத்தில் 5,730 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு, பல்வேறு திட்டங்கள் இம்மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

சிவகங்கை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க எடுத்த முயற்சிகள் பாராட்டுக்குரியவை. மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை இம்மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருவதற்கு மாவட்ட நிர்வாகத்திற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க அனைத்து வகைகளிலும் அரசால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, நல்ல பலன் கிடைத்துள்ளது. இந்நோய்ப் பரவல் மேலும் படிப்படியாகக் குறைந்து இயல்பு நிலை திரும்ப அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**